உ

திருச்சிற்றம்பலம்

திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள்

அருளிச்செய்த

பூம்பாவைத் திருப்பதிக உரை



இந்நூல்

திருமயிலை. ஸ்ரீ கபாலீச்சுரர் தேவஸ்தான

அறப்பொறுப்பாளர்களால்

வெளியிடப்பெற்றது

1956

 [விலை அணா 2

உள்ளுறை

★

திருமயிலைத் தலக் குறிப்பு

திருமயிலைத் தலம் :—ஸ்ரீ பார்வதி தேவியார் மயிலுருவுடன் கபாலீச்சுரரைப் பூசித்த தலம்; சிங்காரவேலர், பிரமன், வேதங்கள் சுக்கிரன், இராமர் இவர்கள் பூசித்த தலம். திருவள்ளுவ நாயனர் அவதரித்த தலம். திருஞானசம்பந்த சுவாமிகள் எலும்பைப் பெண்ணுக்கிய தலம். பேயாழ்வார் அவதரித்த தலம்.

மூர்த்திகள் :—ஸ்ரீ கபாலீச்சுரர், ஸ்ரீ கற்பகவல்லி, கூத்தாடும் விநாயகர், சிங்காரவேலர்.

தீர்த்தம் :—கபாலி தீர்த்தம், கடவுள் தீர்த்தம், வேத தீர்த்தம், வாலி தீர்த்தம், கங்கை தீர்த்தம், வெள்ளி தீர்த்தம், இராம தீர்த்தம்.

பதிப்புரை

—(o)—

ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ் சோதியாகிய எல்லாம்வல்ல இறைவன், ஆன்மாக்களை உய்விக்க அதனதன் பக்குவத்திற்குத் தகுந்தபடி ஆங்காங்கே சகளத் திருமேனியோடு கோயில் கொண்டெழுந்தருளி இருக்கின்றான். அங்ஙனம் அவ் விறைவன் எழுந்தருளியுள்ள தலங்கள் பல. அவற்றுள் தென் தமிழ் நாட்டில், தொண்டை மண்டலத்தில், புலியூர்க்கோட்டத்து எழுமூர் நாட்டுத் திருமயிலையும் ஒன்றாகும். மக்கள் வாழ்க்கை நெறி இன்னதென்று வகுத்தருளிய திருவள்ளுவர் அவதரித்ததும் இம் மயிலையேயாம்.

இம் மயிலையில்தான் திருஞானசம்பந்தப் பெருமானார் பூம் பாவைப் பதிகம் பாடிப்பசையற்ற என்பைப் பெண்ணாக்கியருளினார் திருஞானசம்பந்தர் என்பைப் பெண்ணாக்கிய அற்புதத்தைக் காட்டும் திருவிழா, பங்குனித் திங்களில் பிரமோத்ஸவத்தில் எட்டாம் நாள், சந்நிதிக்கு மேற்கு மாடவீதியில் நடைபெறும். அவ் விழாவின்போது பாடும் பூம்பாவைத் திருப்பதிகத்தின் பொருளை யாவரும் அறிந்து ஓதி இன்பம் அடையவேண்டுமென்ற எண்ணத்தால் திருஞானசம்பந்தர் வரலாற்றையும், பூம்பாவையார் வரலாற்றையும், "மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலை" என்று தொடங்கும் பூம்பாவைத் திருப்பதிகத்தின் பொருளையும் அன்பர் சென்னை, சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர், வித்வான், மயிலை. மாசிலாமணிப் பிள்ளை யவர்களைக்கொண்டு எழுதி வெளியிடலானேன்.

இத் தொண்டினை உவகையோடும் பெற்று எனக்கு எழுதி உதவிய ஆசிரியர் அவர்களுக்கும், இவ்வரிய திருப்பணியைச் செய்யுமாறு எனக்கு நினைப்பூட்டிய என் ஆசிரியர், சென்னைப் பல்கலைக் கழகத் தலைமைத் தமிழ் விரிவுரையாளர் டாக்டர் M. A. துரையரங்கனார், M.A., M.O.L., Ph.D. அவர்களுக்கும், இத் திருப்பணியில் எனக்குத் துணையாயிருந்து என்னோடு ஒத்துழைத்த

'ஸ்ரீ கபாலீச்சரத் தேவஸ்தான' அறப் பொறுப்பு ஆட்சித் தலைவர் திருவாளர், பம்மல். வரதராஜ முதலியார் அவர்களுக்கும், அறப்பொறுப்பு ஆட்சியாளர்கள் திருவாளர், புட்லூர். ஆறுமுக முதலியார் அவர்களுக்கும், பரணிபுத்தூர். சை. அண்ணாமலை முதலியார் அவர்களுக்கும், இறைபணியாளர் G. ஆதிமூலம் B.A., B.L. அவர்களுக்கும் என் அன்பு கலந்த நன்றி உரியதாகுக.

உலகம் உவப்பக் கல்விப்பணி, இயல் இசைக் கலைப்பணி, திருக்கோயில் அறக் கட்டளைத் திருப்பணி, சைவப் பிரசாரத் திருப்பணி, தமிழ் மறைப் பெரும்பணி முதலிய எல்லாத் திருப்பணிகளும் தமக்கே உரியனவாக உளமாற ஆற்றிவருபவரும், திருமயிலை, ஸ்ரீ கபாலீச்சுரர் சந்நிதி மகாமண்டபச் சுவரில் சலவைக் கல்லில் எலும்பைப் பெண்ணாக்கி இறைவன் திருவருட் பெருமையை வெளிப்படுத்திய "மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலை" என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பொதுமக்கள் கண்டு ஓதி இன்பமடையுமாறு பொறித்து வைத்தருளியவருமாகிய கொடைவள்ளல் ஸ்ரீ ல ஸ்ரீ. காசிவாசி. அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருப்பணியை யான் போற்றுவதேயன்றி, என்றும் மறவாநன்றியையும் செலுத்துகின்றேன்.

இந்நூலை மிகக் குறுகிய காலத்தில் அழகாக அச்சிட்டுத் தந்த முத்தமிழ் அரசி அச்சகத்தாரும் எனது நன்றிக்கு உரியவராவர். திருமயிலைப் பிரபந்தங்கள் ஒவ்வொன்றும் இனித் தேவஸ்தான வெளியீடாகப் பதிப்பிக்கப்படும். இறைவன் அருள் புரிவானாக.

இங்ஙனம் :

திருமயிலை ஸ்ரீ கற்பகவல்லி சமேத கபாலீச்சுரத்
தேவஸ்தான அறப் பொறுப்பாளர்
குத்தம்பாக்கம். அய்யா. சுப்பிரமணிய முதலியார்

திருமயிலை
சென்னை
24—3—56

முன்னுரை

சென்னைக்கு அடுத்த திருமயிலை, "ஸ்ரீ கற்பகாம்பாள் சமேத ஸ்ரீ கபாலீச்சரர் தேவஸ்தான" அறப்பொறுப்பு ஆட்சியாளர்கள், திருமயிலையில், திருஞானசம்பந்தப் பெருமானர் எலும்பைப் பெண்ணாக்கித் தெய்வத் திருவருளின் பெருமையை வெளிப்படுத்திய பூம்பாவைத் திருப்பதிகத்தின் பொருளை யாவரும் நன்குணர்ந்து, அப்பதிகத்தை ஓதி, உறுதி பெற்று உய்ய உதவியாகுமாறு அதற்குப் பொழிப்புரை வரையும்படி கட்டளையிட்டனர். எங்கள் குலத்தனித்தெய்வம் பதிஞானத்தால் திருவாய் மலர்ந்தருளிய 'மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலை' என்று தொடங்கும் அத்திருப்பதிகத்திற்கு உரைசெய்வது எவ்வகையிலும் ஆற்றலில்லாத அடியேனுக்கு ஆகாத தொன்றும். ஏனெனில், தெய்வத் திருமறையாகிய தேவார திருவாசகங்களுக்கு மக்கள் உரைசெய்யின், அவர் முக்குண வசத்தராதலின், முறைபிறழ்ந்துரைப்பர் என்பது சான்றோர் கொள்கை. சில ஆண்டுகளுக்கு முன் காஞ்சிபுரம் இராமசாமி நாயுடு அவர்கள், சைவப் பெருந்தகையார் திரு. மறைமலையடிகள், மகா மகோபாத்யாய திரு. கதிரேசஞ் செட்டியார் அவர்கள் முதலிய பெரியோர்கள் துணிவுடன் தேவார திருவாசகங்களுக்கு உரையியற்றத் தொடங்கினர்.

அப்பெரியார்கள் சென்ற வழியைப் பின்பற்றி, அன்புமிக்க அறப்பொறுப்பு ஆட்சியாளர் கட்டளையை மறுக்கக்கூடாமையானும், அடியேன் பேராசையைத் தடுக்கமுடியாமையானும், 'பாற்கடலைச் சிற்றெறும்பு பருக நினைப்பதுபோல' என் புன்மொழியால் உரை எழுதத்துணிந்தேன். திருமயிலையில் ஓராண்டில் பன்னிரண்டு மாதங்களிலும் முறையே ஒவ்வொரு விழா நடந்ததாக ஞானசம்பந்தப் பெருமானர் தம் பதிகத்தில் அருளிச் செய்திருக்கின்றார். அத்திருப்பதிகத்தில் ஐப்பசி ஓணவிழா முதலாகப் பங்குனி உத்திர நாள் விழா ஈறாகத் திருவிழாக்களின் தன்மைகள் வெளிப்படையாகத் தெரிகின்றன ; மற்றவை தெளிவாக விளங்கவில்லை. விளங்கியவற்றை எழுதி, விளங்காதவற்றிற்குப் பெரியோர் பலர் கூறும் பொருளை அடிக்குறிப்பில் எழுதியுள்ளேன். இங்ஙனம் எழுதிய என் வெற்றுரையைப் பெரியோர்கள் குறைநீக்கிக் குணங்கொண்டு வாழ்த்துவார்களாக!

இவ்வுரையை எழுதுவதற்கு உடனுதவியாற்றிய என் உழுவலன்பர்கள் பன்மொழிப்புலவர், பல்கலைச் செல்வர், சென்னை அரசாங்கக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்வான், திரு. தெ. பொ. மீனுட்சி சுந்தரனர் M.A., B.L., M.O.L., Dip. Econ. etc. அவர்களுக்கும், சென்னைப் பல்கலைக் கழகத் தலைமைத் தமிழ் விரிவுரையாளர் டாக்டர். M. A. துரையரங்கனர் M.A., M.O.L., Ph.D. அவர்களுக்கும் யான் நன்றியறிதலுடையவனவேன்.

இங்ஙனம் :

வித்வான், மயிலை. மாசிலாமணி,

தமிழாசிரியன், சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை.

உ

திருச்சிற்றம்பலம்

திருஞான சம்பந்தர் வரலாறு

வான்பொய்ப்பினும் தான்பொய்யாத தெய்வக் காவிரியால் வளம் பெற்ற சோழநாட்டிலே, பன்னிரண்டு திருப்பெயரையுடைய சீகாழி என்னுந் திருத்தலத்திலே கௌணியர் கோத்திரத்திலுதித்த சிவபாத இருதயருக்கும், பகவதியார் என்னும் அம்மையாருக்கும், ஆளுடையாளுடன் திருத்தோணி என்னும் சீகாழி அமர்ந்த பிரான் திருவருளால் வண்தமிழ்செய் தவம்நிரம்பச் சிவம் பெருக்கும் பிள்ளையார் திரு அவதாரம் செய்தார்.

தாய் தந்தையர், திருக்குழந்தையின் பிறப்பை ஒட்டிச்செய்யும் பல சடங்குகளையும் நிறைவேற்றிப் பதினோராம் நாள் அக் குழந்தைக்கு ஆளுடைய பிள்ளையார் என்று பெயர் சூட்டினார்கள். பிள்ளையாருக்கு மூன்றாண்டுகள் நிரம்பின.

ஒரு நாள், சிவபாத இருதயர் நீராடப்புறப்பட்டார். ஆளுடைய பிள்ளையார் அழுது கொண்டே அவரைப் பின்தொடர்ந்தார். சிவபாத இருதயர், பிள்ளையாரை உடன் கொண்டு சென்று திருத் தோணியப்பர் ஆலயத்தின் பிரம தீர்த்தக் கரையில் பிள்ளையாரை இருக்க வைத்து, நியமங்களை முடித்து, நீரில் மூழ்கி, இருக்குவேதம் பத்தாம் மண்டலம், நூற்றுத் தொண்ணூறும் சூக்தமாகிய அகமருஷண சூக்தத்தைச் செபித்துக் கொண்டிருந்தார்.

நீரில் மூழ்கியவாறே அவர் நெடுநேரம் இருந்தமையால், தந்தையாரைக் காணப்பெறாது திருத்தோணியப்பர் ஆலயத்தின் சிகரத்தைப் பார்த்து அம்மே! அப்பா! என்று ஆளுடைய பிள்ளையார் அழைத்தருளி அழுதார். திருத்தோணியப்பர் பிள்ளையாருக்குத் திருவருள் செய்யும் பொருட்டு, அம்மையாருடன் இடபவாகனத்திலெழுந்தருளி அவருக்குக் காட்சி அளித்ததுடன், உமாதேவியாரைப் பார்த்து, "திரு முலையினின்றும் சொரிகின்ற பாலடிசிலைப் பொற் கிண்ணத்தில் கறந்து ஊட்டுவாயாக" என்று

கூறினார். அம்மையார் அவராணைப்படி பால் கறந்து, அதனுடன் சிவஞானத்தையுங் கலந்து பிள்ளையார் அருகில் சென்று, கண்ணீர் துடைத்து ஞானப் பாலை ஊட்டி யருளினார். சிவஞானப் பாலமுதுண்டு, அச்சிவஞானத்தோடு சம்பந்தம் பெற்றமையால் அன்று முதல் பிள்ளையார் திருஞான சம்பந்தப் பிள்ளையார் எனப் பெயர் பெற்றார்.

சிவபாத இருதயர் நீருள் மூழ்கி அகமருஷண சூக்தத்தை மூன்று முறை செபித்து முடித்த பின், கரையேறிப் பிள்ளையாரை நோக்கினார். திருமுலைப்பால் பிள்ளையார் கடைவாயில் ஒழுகி யிருந்ததைக் கண்டு, "எச்சில் கலக்க இப்பாலூட்டினவர் யார்? அவரைக் காட்டு" என்று சிறிய கோல் ஒன்று எடுத்து ஓங்கிப் பிள்ளையாரை அச்சுறுத்தினார். திருஞான சம்பந்தப் பிள்ளையார் ஆனந்தக்கண்ணீர் சொரியத் தமது திருமுடிக்குமேலே ஒரு கையைத் தூக்கி, விரலால் சுட்டித் திருவருள் ஞானம் நிறைந்த தமது திருவாக்கால், "**தோடுடைய செவியன்**" என்று முதலிற் செவியைச் சிறப்பித்து, அச்சீகாழியில் வீற்றிருக்கும் அம்மையப்பரை அடையாளங்களோடு திருப்பதிகம் பாடிக் காட்டியருளினார். அடியார் பலரும் ஆரவாரித்தனர். சிவபெருமான் பெரியநாயகியாரோடும் இடப வாகனத்திலெழுந்து தோன்றினார். பிள்ளையார் திருக்கோயிலுக்கு எழுந்தருளினார். தந்தையாரும் இவ்வற்புதத்தை நோக்கி திருஞான சம்பந்தப் பிள்ளையாருக்குப் பின்னே சென்றார். பிள்ளையார் தோணியப்பரை வணங்கிப் பின் கோயிலினின்றும் புறப்பட்டார்.

திருஞானசம்பந்தர் மறுநாள் காலையில் தோணியப்பரை வணங்கித் "**திருக்கோலக்கா**" என்னுந் தலத்திற்கு எழுந்தருளி **'மடையில் வாளை பாய'** என்னுந் திருப்பதிகத்தைக் கையினால் ஒத்தறுத்துப் பாடினார். சிவபெருமான் பெருங்கருணையால் ஸ்ரீபஞ்சாக்கர மெழுதிய **பொற்றாளங்கள்** வையமெலாம் உய்யவரும் மறைச்சிறுவர் கைத்தலத்து வந்து தங்கின. பிள்ளையார் தரையில் நடந்து வருதலைக்கண்ட தந்தையார் பொறாது தமது தோளில் தாங்கிச் சென்றார். அங்ஙனம் பிள்ளையார் பல தலங்களையும் வணங்கி **மாறன்பாடி** என்னுந் தலத்தில் எழுந்தருளியிருக்கும் பொழுது **திருநெல்வாயில் அரத்துறையில்** வீற்றிருக்கும் சிவபெருமான், பிள்ளையார் வழிநடையாலுண்டான வருத்தத்தைத் திருவுள்ளத்தில்

கொண்டு, முத்துச் சிவிகையும், முத்துக் குடையும், அழகிய முத்துச் சின்னமும் அளிக்க அவற்றைப் பெற்று 'எந்தை ஈசன் எம்பெருமான் ஏறமர் கடவுள்' என்ற முதலையுடைய திருப்பதிகம் பாடினர்.

அவ்விடத்திலிருந்து பல தலங்களையுங் கண்டு போற்றி, திருப்பாச்சி லாச்சிராமத்திற்கு எழுந்தருளிப் பெருமானை வணங்கி, 'துணிவளர் திங்கள் துலங்கி விளங்க' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடிக்கொல்லி மழவன் மகளுக்கிருந்த முயலகன் என்னும் நோயைத் தீர்த்தருளி, அங்கிருந்தும் புறப்பட்டுச் சென்று மற்ற தலங்களையும் தரிசித்துக்கொண்டே திருப்பட்டீச்சரத்தில் முத்துப் பந்தல் பெற்று' 'பாடல் மறை சூடன்மதிப் பல்வளையோர்' என்ற முதலையுடைய திருப்பதிகம் பாடி யருளினர். அப்பதியிலிருந்தும் திருவாவடுதுறையி லெழுந்தருளித் தம் தந்தையார் வேள்வி செய்தற்குப் பொன் வேண்ட, அத்தலத்திலெழுந்தருளிய மாசிலாமணி ஈசரை 'இடரினும் தளரினும் எனதுறு நோய்' என்று தொடங்கும் பதிகத்தைப் பாடியருளிப் பொற்கிழி பெற்றுத் தந்தையாருக்கு அளித்தார்.

பின்பு, பல தலங்களையும் தரிசனஞ் செய்து கொண்டு திருமருகல் என்னும் தலத்திலெழுந்தருளி ஒரு வணிகன் பாம்பால் கடிக்கப்பட்டு விடமேறி இறக்க, அவ்வணிகனுடன் வந்த கன்னிகை புலம்பியழக்கண்டு 'சடையாயெனுமால்' என்னும் திருப்பதிகம்பாடி விடத்தை நீக்கி அவ்வணிகன் உயிர் பெறுமாறு செய்தருளினர்.

பிறகு, திருநாவுக்கரசரைச் சந்தித்து அவரோடும் பல தலங்களையும் வணங்கி, 'திருவீழிமிழலை' என்னுந் தலத்தையடைந்து "வாசி தீரவே காசு நல்கிடீர்" என்னும் திருப்பதிகம் பாடி வாசி தீர்ந்த 'பொற்காசு' பெற்று, திருமறைக்காடு எய்தி, வேதங்கள் திருக் காப்புச் செய்துவைத்த 'திருக்கதவத்தை' "சதுரம்மறைதான் துதிசெய்து வணங்கும்" என்ற முதலையுடைய பதிகத்தைப் பாடித் திறப்பித்தார். பின்பு, கன்னி நாடு அமணர் தம்மால் கட்டழிந்ததைக் கேட்டுப் பல தலங்களையும் வணங்கிக் கொண்டே தென்தமிழ் மதுரைமாநகர் சேர்ந்தார். மதுரையிலுள்ள சமணர்கள் இரவினில் முத்தமிழ் விரகர் தங்கியுள்ள மடத்தினில் தீயிட்டனர். அதனை அடியார்களால் அறிந்த பிள்ளையார் "செய்யனே திருவாலவாய் மேவிய" என்று தொடங்கும் பதிகத்தில் " பொய்யராம் அமணர்கொளுவும் சுடர், பையவே சென்று பாண்டியற்கு ஆகவே" என்று

அருளிச் செய்தார். உடனே வெந்தழலின் வெம்மை சென்று பாண்டியனைப்பற்றி **வெப்பு நோயை** உண்டாக்கிற்று.

பாண்டியனிடம் உண்டாகிய சுரநோய் எவ்வகையானுந் தீராதது கண்டு பாண்டிமா தேவியாரான மங்கையர்க்கரசியாரும், பரிவுடைய அமைச்சராகிய குலச்சிறையாரும் சண்பை ஆண்டகையாரை வணங்கிப் பாண்டியனடைந்த சுரநோயைத் தீர்த்து அமணரை வெற்றி கொள்ள வேண்டுமென விண்ணப்பிக்க, பிள்ளையார் ஆலவாய் அண்ணலை வணங்கிப் போற்றி, '**மந்திரமாவது நீறு**' என்னுந் திருப்பதிகமோதித் திருவளர் நீறு கொண்டு திருக்கையால் தடவப் பாண்டியன் வெப்பு நோய் தீர்ந்தது; சமணர் பரிபவமுற்றனர். ஆயினும், கனல் வாதம், புனல் வாதம் இவற்றால் வாதிடலாம் என்றனர். அவர் சொற்படியே பாண்டியன், அவையில் தீமூட்டுமாறு வேலைக்காரரை ஏவினன்; தீமூட்டப்பட்டது.

ஆண்டுத் திருஞானசம்பந்தப் பிள்ளையாரும், சமணர்களும், மற்றையோரும் வந்திருந்தனர். சண்பை காவலர் தாம் பாடிய திருமுறையைப் பிரித்துப் பார்க்க, "**போக மார்த்த பூண் முலையாள்**" என்ற முதலையுடைய திருநள்ளாற்றுப் பதிகம் தோன்றியது. பிள்ளையார் திருநள்ளாற்றுப் பெருமானை வணங்கி அப்பதிக மெழுதிய ஏட்டினைக் கழற்றிக் கையிற்கொண்டு என்னை யாண்டருளும் ஈசன் நாமமே மெய்ப் பொருளா யுள்ளது என்று காட்டுமாறு இவ்வேடு நெருப்பில் அழியாது நிலை பெறுக என்னுங் கருத்துடைய "**தளரிள வளரொளி**" என்று தொடங்கும் திருப்பதிகம் பாடிக் கொண்டே அந்த ஏட்டை நெருப்பிலிட்டருளினர். அவ்வேடு அக்கினியில் பசுமையும், புதுமையு முடையதாய் விளங்கியது. சமணர்கள் தீயிலிட்ட ஏடு தீய்ந்து கரிந்தது.

திருஞானசம்பந்த சுவாமிகள் சமணர்களை நோக்கி "இனிவேறு என்ன வாதம் செய்வோம்" என்று கேட்டார். சமணர்கள் "சிறந்த மெய்ப் பொருளின் உண்மை நிலை பெற்ற இயல்புகளை ஏட்டிலெழுதி யாமும் நீரும் வைகை யாற்றில் விட்டால், அந்த ஆற்று நீரோடு செல்லாமல் அந்நீரை எதிர்ந்து செல்லும் ஏடே மெய்ப் பொருளுடையது" என்று சொன்னார்கள். இதைக் கேட்டிருந்த அமைச்சர் குலச்சிறையார், பாண்டிய அரசனிடம் "இந்த வாதிலும் தோற்றவர்கள் என் செய்வது?" என்று கூறச் சமணர்கள் குலச்சிறையார்

மேலுண்டான கோபத்தால் வாய் தவறித் தாங்களே நிகரில்லாத இவ்வாதில் தோற்ருமாகில் எங்களை இவ்வரசனே கழுவிலேற்றுவாளுக'' என்றனர். பாண்டியன் சமணர்கள் சொல்லிய சொல்லைக்கேட்டு ''நீவிர் கோபத்தால் ஆராயாமல் இவ்வாறு கூறினீர்; உங்கள் செய்கையையும் மறந்தீர்; சமய உண்மைகளை எழுதிய ஏட்டினை வைகையிலிடுவதற்குப் புறப்படுங்கள்'' என்று சொன்னுன்.

திருஞானசம்பந்தப் பிள்ளையார் முத்துச் சிவிகையிலேறிப் புறப்பட, அரசன் பிள்ளையார்க்குப் பின்னே குதிரைமேலேறிச் சென்ருன். சமணர்களும் வைகையை யடைந்து தம் சமய நூலில் கூறும் ''அத்தி நாத்தி'' என்று எழுதிய ஏட்டை ஆற்று நீரில் விட்டார்கள். அந்த ஆறு ஏட்டை அடித்துக் கொண்டு மிக விரைவாகக் கடலை நோக்கிச் சென்றது. பிள்ளையார் ''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்'' என்று தொடங்கும் திருப்பதிகத்தை எழுதி வைகையாற்றிலிட்டார். இட்ட ஏடு வைகையாற்றில் எதிர்த்து நீரைக் கிழித்துக் கொண்டு ஓடிற்று. பாண்டியன் கூனும் நிமிர்ந்தது. எண்ணுயிரம் சமணர்களும் தாங்கள் செய்த சூளுரையின்படி கழுவேறினர்.

திருஞானசம்பந்தப் பெருமான் மதுரையினின்றும் புறப்பட்டுப் பல தலங்களையும் வணங்கித் திருக்கொள்ளம் பூதூரை யடையச் செல்லுகையில், இடையே காவிரியின் கிளையாகிய குடமுருட்டியில் நீர் பெருக்கெடுத்தோட, ஓடம் விடுவாறின்றி இருந்தது. பிள்ளையார் ஓடத்தைக் கட்டவிழ்த்து, அதில் சிவனடியார்களை யேற்றித் தாமும் அதன்மேலெழுந்தருளிச் சிவபெருமானை '' கொட்டமே கமழும் '' என்ற முதலையுடைய திருப்பதிகம் பாடியருள, சிவபெருமான் திருவருளால் ஓடம் அடுத்த கரையில் சேர்ந்தது. பிள்ளையார் ஓடத்தினின்றிழிந்து திருக்கொள்ளம் பூதூர்க் கோயிலை யடைந்து போற்றினுர்.

பின்பு, பிள்ளையார் திருநள்ளாறு சென்று வணங்கித் திருத்தெளிச்சேரி என்னுந் தலத்திலெழுந்தருளிய பார்வதீச்சுரரை வணங்கிச் சென்று பௌத்தர்கள் வாழும் 'போதிமங்கை' என்னும் ஊரை யடைகையில், சிவனடியார்கள் 'பரசமயகோளரியார் எழுந்தருளினுர்' என்று பல சின்னங்கள் எடுத்தூத, அங்கிருந்த பிடக நூலுணர்ச்சியில் சிறந்த புத்த நந்தி சமணர்கள் புடை சூழ எதிரே வந்து வெற்றிச் சின்னங்களை ஊத வொட்டாமல் தடுத்தனன்.

இந்நிலையை அடியார்கள் திருஞானசம்பந்தப் பிள்ளையாரிடம் விண்ணப்பிக்க, அருகே நின்றிருந்த திருப்பதிக மெழுதும் சம்பந்த சரணலயர் பஞ்சாக்கரத் திருப்பதிகத்தில் "புத்தர் சமண் கழுக் கையர் பொய்கொளா" என்று தொடங்கும் பத்தாம் பாசுரத்தில் 'அத்திர மாவது அஞ்செழுத்துமே' என்ற திருவாக்காலே "இடி இடித்து இப் புத்த நந்தியின் தலை உருண்டு விழக்கடவது" என்று கோபித்துக் கூறினர்; அவ் வளவில் இடிஇடித்துப் புத்தநந்தியின் உடலும் தலையும் தனித்தனி வேருகும்படிசிதைத்தது. பௌத்தர் புடை சூழச் சாரிபுத்தன் வாதஞ் செய்யச் சம்பந்த சரணலயர் அப் புத்தனையும் வாதில் வென்று அவனைச் சைவனுக்கினர்.

பாலருவாயர் அங்கிருந்தும் பல தலங்களையும் வணங்கித் தொண்டை நாட்டுக் கெழுந்தருளி திரு ஒத்தூரை வந்தடைந்தார். அவ்விடத்தில் ஒரு சிவனடியார் அழுதுகொண்டுதிருஞானசம்பந்தர் திருவடிகளில் வணங்கிச், "சுவாமி! அடியேன் சிவ பெருமானுக் கென்று வைத்து வளர்த்த பனைமரங்கள் நீண்டு வளர்ந்தும்ஆண் பனைகளாய்க் காய் காய்க்காமலிருக்க, அவற்றைக் கண்ட அமணர் கள் அவமதிப்பாகப் பேசினர்கள். அவ்விழிவு தீர அருள் செய்ய வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

சண்பை வேந்தர் "பூத்தேர்ந்தாயன கொண்டு" என்று தொடங் கும் பதிகத்தை யருளிச்செய்ய ஆண்பனைகள் பெண்பனைகள் ஆயின. பிள்ளையார் அவ்விடம் விட்டுப் பலதலங்களையும் வணங்கிச் சென்று திருவொற்றி யூரை வணங்கி ஆண்டு எழுந்தருளியிருந்தார், திருமயி லாபுரியிலிருந்த சிவநேசச் செட்டியார் பிள்ளையாரைத் தரிசித்துத் திருமயிலைக்கு எழுந்தருள வேண்டினர். பிள்ளையார் அவ் வேண்டு கோளுக்கிரங்கித் திருமயிலைக்கு எழுந்தருளிக் கபாலீசரை வணங்கிச் சிவநேசச் செட்டியார் குறையைத் தீர்க்க *அங்கத்தைப் பூம்பாவை யாக்கினர்.

பிறகு, சண்பையர் கோன் அம்மயிலையி லிருந்து புறப்பட்டுத் தெய்வத் திருத்தலங்கள் பலவற்றையும் வணங்கித் திருப் பெருமண நல்லூரை யடைந்து நம்பாண்டார் நம்பி திருமகளாரை நன்னுளில் மங்கல வாத்தியங்கள் ஒலிக்க நான்மறை ஓசைமுழங்கப் பாணிக்கிரகணம்

* அங்கம் பூம்பாவை யாக்கிய வரலாற்றின் விரிவு தனியே எழுதி யிருப்பதைப் பார்க்க.

செய்து, ஓமாக்கினியை வலம் வந்து, அக்கினி மூர்த்தியா யுள்ளவர் ஸ்ரீசிவபெருமானே என்று நினைத்துத் திருப்பெருமண ஆலயத்தை யடைந்து "கல்லூர்ப் பெருமணம்" என்று தொடங்கும் பதிகத்தில் "திருநல்லூரிலுள்ள திருப் பெருமண மென்னுங் கோயிலில் எழுந்தருளியிருக்கும் நம்பனே! தேவரீர் திருவடி நிழலை யடையும் பருவம் இது" என்று அருளிச்செய்ய, தேவதேவன் திருவருள் கூர்ந்து "நீயும், நின்மனைவியும், நின்திருமணங்காண வந்தவரும் சிவலிங்கத்தே தோன்றிய சோதியில்கலந்து எம்மை வந்தடையுங்கள்" எனச் சோதிலிங்கத் திருவுருவங்கொண்டார். திருஞானசம்பந்தப் பிள்ளையார் யாவருக்கும் சிவஞானத்தைக் கொடுக்கும் உண்மை நெறியர்வது "நமச்சிவாய" என்னும் மந்திர மாம் என்று "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" என்று தொடங்கும் நமச்சிவாயத் திருப்பதிகத்தை எல்லோருங் கேட்கும்படி அருளிச் செய்து, "இங்குள்ளார் யாவரும் அவரவர் பிறவி நீங்குமாறு இந்தச் சோதியினுள்ளே புகுதருக" என்று அருளிச் செய்தார். எல்லோரும் சோதியினுள் புகுந்தார்கள். பின்பு, பிறவிப்பிணியை யறுக்கவந்த திருஞானசம்பந்தப் பிள்ளையார் தம் பத்தினியாரைக் கைப் பற்றிக்கொண்டு அச் சோதிலிங்கத்தை வலம்வந்து அதனுள் புகுந்து சிவத்துடன் இரண்டறக் கலந்தருளினர்.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

அங்கம் பூம்பாவையார் வரலாறு

சென்னையைச் சார்ந்த திருமயிலாப்பூரில், வைசியர் குலத்தில், சிவபக்தி அடியார் பக்தியில் சிறந்த சிவநேசச் செட்டியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் பிள்ளைப் பேறின்றி நெடிது தவமிருந்து ஒரு பெண் மகவைப் பெற்ருர்; அம் மகளுக்குப் பூம்பாவை என்று பெயரிட்டார். அருமை பெருமையுடன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமு மாகப் பூம்பாவை வளர்ந்து வந்தாள்.

ஒருநாள் பூம்பாவையார் நந்தவனத்தில் பூப்பறிக்கையில் அரவந் தீண்டி இறந்தார். சிவனேசச் செட்டியார் மிகமிகத் துன்பமடைந்து, பூம்பாவையார் உடலைத் தகனஞ் செய்து, எலும்பையுஞ் சாம்பரையும் குடத்திலிட்டுக் கன்னிமாடத்தில் வைத்துப் போற்றிவந்தார்.

ஒருநாள் தென் தமிழ் திகழுந் திருக்கழுமலத்தில் அவதரித்த திருஞான சம்பந்தர் என்னும் ஆளுடைய பிள்ளையார், திருவொற்றியூரில் எழுந்தருளியிருப்பதை அடியார் மூலமாய் அறிந்த சிவனேசச் செட்டியார், அப்பிள்ளையாரை அணுகித் துதித்து வணங்கித் திருமயிலைக்கு எழுந்தருளுமாறு வேண்டினுர். ஆளுடைய பிள்ளையாரும் அவ்வாறே உடம்பட்டுத் திருமயிலைக்கு எழுந்தருளினுர். செட்டியார், அடியார்களோடும் அவரை நடைக்காவணமிட்டு எதிர்கொண்டு அழைத்தார். சுவாமிகள் திருமயிலையில் ஸ்ரீகபாலீசரைத் தரிசனஞ் செய்து, திருக்கோயில் மதிற் புறத்தே சென்றருளினுர். அடியார்கள் சுவாமிகளிடம் சிவனேசச்செட்டியார் குறையை விண்ணப்பிக்க, சுவாமிகள் கேட்டருளி எலும்பும் சாம்பரும் நிறைந்த குடத்தை

திருக்கோயிற் புறத்தேயுள்ள சந்நிதி வாயிலிற் கொண்டு வருமாறு செட்டியாருக்குக் கட்டளையிட்டார். செட்டியார் குடத்தைச் சந்நிதி வாயிலிற் கொண்டுவந்து வைத்தார்.

ஆண்டுத் திருமயிலையிலுள்ள சிவனடியார்களும், புறச் சமயத்திலுள்ளவர்களும், பொறாமை கொண்ட மனத்தினரும் ஒருங்கு கூடினர். சைவந் தழைக்கவந்த பெருந்தகையார், சிவபெருமான் திருவருட் பெருமையைத் தம் மனத்தே எண்ணி, மண் குடத்தை நோக்கியருளி "மக்கள் பிறப்பினாலாய பயன் சிவனடியாருக்கு அமுது செய்வித்தலும், சிவபெருமானுடைய திருவிழாவைக் கண்டு தரிசித்தலும் என்பது உண்மையாயின், இவ்வுலகத்தார் காண எழுந்து வருவாயாக" என்னும் கருத்து அமைந்த 'மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலை' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடி யருளினார். அப்போது செந்தாமரையில் இலங்கும் திருமகள் போலக் குடத்தினின்றும் பூம்பாவையார் எழுந்து இலங்கினார்.

இந்த அற்புதத்தைக் கண்ட சிவனேசச் செட்டியார் மெய்ம்மயிர் பொடிப்ப, விதிர்விதிர்ப்படைந்து, கண்கள் நீர் வார உலகமுய்ய வந்த ஆளுடைய பிள்ளையின் திருவடியில் விழுந்து வணங்கி எழுந்து நின்று, தம் பொருளையும் பூம்பாவை யாரையும் அப் பெருமானுக்கே அர்ப்பணஞ் செய்திருந்த செய்தியை அவர் திருமுன்பு விண்ணப்பித்து, அவ்வாறே பூம்பாவையை மணந்து ஆட்கொள்ள வேண்டினார். ஞான சம்பந்தப் பெருமான் அவ்வுரை தகாதென்று மறுத்துச் செட்டியாருக்கும், உறவினருக்கும், மற்றையோருக்கும் திரு வருளின் பெருமையை எடுத்துரைத்து இன்மொழி கூறித் தேற்றி விடைபெற்றுக்கொண்டு மற்றைத் தலங்களை வணங்கச் சென்றார்.

சிவனேசச் செட்டியார் தம் புதல்வியாரை வேறுயாருக்குந் திருமணஞ் செய்து கொடாமல், கன்னிமாடத்திலேயே இருக்கச் செய்தார். பூம்பாவையார் சிவபிரான் திருத் தொண்டில் ஈடுபட்டுச் சிவத் தியானத்தோடிருந்து, பிறகு சிவபதவி அடைந்தார்.

உ
சிவமயம்

திருமயிலாப்பூர்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்

பூம்பாவைத் திருப்பதிகம்

பண் — சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்

1. மட்டிட்ட புன்னையங் கானல் *மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணுதே போதியோ பூம்பாவாய்!

பூம்பாவாய்! தேன் சிந்துகின்ற புன்னை மரச்சோலைகள் சூழ்ந்த அழகிய மயிலையின்கண், கட்டிய கபாலீச்சரத்தில் விருப்பங் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமானை, இடைவிடாமல் தியானிக்குந் தன்மையுடைய சரியையாளர் முதலாகப் பல்வேறு குழுவினர்க்கும் உணவினைச் சமைத்து வழங்கும் பெருஞ்சோற்று விழாவைக் காணமல் போகக் கடவையோ!

---

* *கடற்கரையில் மயில்கள் ஆர்த்து நிறைந்திருக்கும் சோலையில் உமா தேவியார், மயில் வடிவத்தோடு சிவபெருமானைப் பூசித்துப் பேறு பெற்ற வரலாறு ஈண்டு நினைத்தற் குரியது.*

கல்வெட்டுக்களில் 'மயிலார்ப்பூர்' என்றும், 'மயிலாப்பு' என்றும் வழக்கிலிருத்தலும் நோக்குக.

2. மைப்பயந்த ஒள்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றான் கபாலீச் சரம்அமர்ந்தான்
ஐப்பசி ஓண விழாவும் அருந்தவர்கள்
துய்ப்பனவுங் காணாதே போதியோ பூம்பாவாய் !

பூம்பாவாய் ! அஞ்சனந் தீட்டிய ஒளி பொருந்திய கண்களை யுடைய இளம் பெண்கள் நடமாடும் சிறந்த மயிலையின்கண், அடியார்க்கு அருள் செய்யக் கையிலேந்திய திருநீற்றுப் பொக்கணத்தை யுடையவனுய்க் கபாலீச்சரத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு, ஐப்பசித் திங்கள், ஓண நட்சத்திரத்தில் நடைபெறும் விழாவையும், அவ்விழாவில் அரிய சிவஞானச் செல்வர்கள் உண்டு களித்தலையும் காணாமல் போகக் கடவையோ !

---

3. வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச் சரத்தான்தொல் கார்த்திகைநாள்
தளத்தேந்து இளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய் !

பூம்பாவாய் ! வளையலை யணிந்த இளம் பெண்கள் வசிக்கும் சிறந்த மயிலையின்கண், பல்வேறு பண்டங்கள் மரக்கலங்களிலும், வண்டிகளிலும் வந்து நிறைதலால் வளமைபெற்ற வீதியில், அடித்தளமகன்று அண்ணாந்து விளங்கும் இளமுலையினை யுடையவரான அழகுமிக்க மங்கையர்கள், ஐவகை அச்சத்தாலும் நடுங்குதற்கு இடமாகாத கபாலீச்சரத்தி லெழுந்தருளியுள்ள சிவபெருமானது கார்த்திகைத் திங்கள், கார்த்திகை நட்சத்திரத்தில் தொன்றுதொட்டுக் கொண்டாடும் விளக்கீட்டு விழாவைக் காணாமல் போகக் கடவையோ !

---

4. ஊர்திரை வேலை புலாவும் உயர்மயிலைக்
கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனில்
கார்தரு சோலைக் கபாலீச் சரம்அமர்ந்தான்
*ஆதிரைநாள் காணுதே போதியோ பூம்பாவாய் !

பூம்பாவாய்! கடல் அலைகள் கரையில் சென்று வீசும் மயிலையின்கண், கூர்மை பொருந்திய வேல் தொழிலில் வல்ல வீரர்கள், தத்தம் வெற்றியைச் சிறப்பித்துக் கொண்டாடும் இடங்கள் சூழப்பெற்று, மேகங்கள் தவழும் சோலைகளுக்கிடையி லுள்ள கபாலீச்சரத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்கு மார்கழித் திங்கள், ஆதிரைநாளில் நடைபெறும் விழாவைக் காணுமல் போகக் கடவையோ !

---

5. மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றுன் கபாலீச் சரம்அமர்ந்தான்
நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணுதே போதியோ பூம்பாவாய் !

பூம்பாவாய்! மைதீட்டிய ஒளிபொருந்திய கண்களையுடைய இளம் பெண்கள் கூடிப் போற்றும் சிறந்த மயிலையின்கண், செவ்வையாகப் பூசிய திருநீற்றை யுடையவனுய்க் கபாலீச்சரத்தி லெழுந்தருளிய சிவபெருமான் பொருட்டு, நெய் பெய்து வெண் சோற்றையட்டுத் தங்கள் அழகுக்கு ஒத்த ஆபரணங்களை யணிந்த பெண்கள், அடியார்க் கிட்டுத் தைத்திங்கள், பூசநாளில் கொண்டாடும் விழாவைக் காணுமல் போகக் கடவையோ !

---

* "ஆர்திரை" என்பதே சிறந்த பாடம்.

"ஆர்திரையான் ஆர்திரையான் என்றென் றயருமால், ஊர்திரை வேலி யுலகு."—(முத்தொள்ளாயிரம்) தருமபுர ஆதீனம்-2ஆம் திருமுறை.

6. மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
அடலானே றூரும் அடிகள் அடிபரவி
நடமாடல் காணுதே போதியோ பூம்பாவாய் !

பூம்பாவாய்! தழைத்துநீண்ட மடல் பொருந்திய தென்னஞ் சோலைகள் நிறைந்த மயிலையின்கண் உள்ள மக்கள், மாசித் திங்களில், மகநாளில் நடாத்தும் கடலில் நீராட்டு விழாக் கண்டு, கபாலீச்சரத்திலமர்ந்து வெற்றி பொருந்திய இடப வாகனத்திலேறி யருளும் சிவபெருமானுடைய திருவடிகளைப் போற்றி நடம் ஆடுதலைக் காணுமல் போகக் கடவையோ!

———

7. மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி யுத்திரநாள்
ஒலிவிழாக் காணுதே போதியோ பூம்பாவாய் !

பூம்பாவாய்! பலவித விழாக்கள் நிறைந்த வீதியினையுடைய சிறந்த மயிலையின் கண், இளம் பெண்கள்கூடி நிகழ்த்தும் ஒலி பொருந்திய விழாவைக் கண்டு, கபாலீச்சரத்தி லெழுந்தருளி யிருக்கும் சிவபெருமானுக்குப் பூசைக் காலத்தில் 'விரும்பிப் பாடுதலைச் செய்யும் பங்குனித் திங்கள், உத்திர நாளில் நடக்கும் ஆரவாரமுடைய விழாவைக் காணுதே போகக் கடவையோ!

———

8. தண்ணா அரக்கன்தோள் சாய்த்துகந்த தாளினான்
கண்ணார் மயிலைக் கபாலீச் சரம்அமர்ந்தான்
பண்ணார் பதினெண் கணங்கள்தம் அட்டமிநாள்
கண்ணாரக் காணாதே போதியோ பூம்பாவாய் !

பூம்பாவாய்! இரக்கமில்லாத அரக்கனான இராவணனுடைய தோளை முன்பு வலிகெடச் செய்து, பின்பு அவன் பாடிய சாமவேத கானத்தால் மகிழ்ந்து அருளிய திருவடியையுடையவனாய் ஞானிகள் விரும்பி வசிக்கும் திருமயிலையில், கபாலீச்சரத்தி லெழுந்தருளிய வனுடைய இன்னிசை பாடும் பதினெட்டுக் கணங்களும் போற்றுகின்ற அட்டமிநாள் விழாவைக் காணாமல் போகக் கடவையோ !

9. நற்றா மறைமலர்மேல் நான்முகனும் நாரணனும்
உற்றாங் குணர்கிலா மூர்த்தி திருவடியைக்
கற்றார்கள் ஏத்துங் கபாலீச் சரம்அமர்ந்தான்
*பொற்றாப்புக் காணாதே போதியோ பூம்பாவாய் !

பூம்பாவாய்! நல்ல தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் பிரமனும், திருமாலும் முறையே அன்னமாய்ப் பறந்தும், ஏனமாய் அகழ்ந்தும் அறிய முடியாத சிவபெருமான் திருவடியைச் சிவநெறியையே கற்ற பெரியோர்கள், துதிப்பதற்கு இடமான கபாலீச்சரத்தி லெழுந்தருளி யிருக்கும் அப்பெருமானுடைய *பொற்றாப்பு விழாவைக் காணாமல் போகக் கடவையோ !

---

*பொற்றாப்பு—சிலர் ஒருவகை விழா என்பர்.

பொன் + தாம்பு = பொற்றாப்பு என வலித்தல் விகாரம் பெற்றது ; திருப்பொன்னூசல் விழா என்பர் சிலர்.

பொற்றாப்பு—இது டோலோத்ஸவம், அல்லது அறைக்கட்டு உத்ஸவம் என்று 3 முதல் 10 நாள் வரையில் மார்கழி மாதத்தில் நடக்கிறது.
(சித்தாந்தம்—மலர் 27, இதழ் 8)

10. *உரிஞ்சாய வாழ்க்கை அமணுடையைப் போர்க்கும்
இருஞ்சாக் கியர்கள் எடுத்துரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச் சரம்அமர்ந்தான்
†பெருஞ்சாந்தி காணுதே போதியோ பூம்பாவாய் !

பூம்பாவாய் ! இம்மயிலையில் ஆடையணியாத அமணர்களும், ஆடையை யணியும் சாக்கியர்களும் (எலும்பைப் பெண்ணுக்கும் இச்செய்கை செய்து முடித்தற்குரியதன்று என்று) எடுத்துக் கூறுகின்றவர்கள் திகைப்படைய எழுந்து வாராமல், மரங்கள் செறிந்த இருண்ட சோலைகள் சூழந்த கபாலீச்சரத்தி லெழுந் தருளிய சிவபெருமானுடைய பெரிய சாந்தி விழாவைக் காணுமல் போகக் கடவையோ !

---

11. கானமர் சோலைக் கபாலீச் சரம்அமர்ந்தான்
தேனமர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம் பந்தன் நலம்புகழ்ந்த பத்தும்வலார்
வானசம் பந்தத் தவரோடும் வாழ்வாரே.

திருஞானசம்பந்தப் பெருமான், மணம் பொருந்திய சோலைகள் சூழ்ந்த கபாலீச்சரத்தி லெழுந்தருளியுள்ள சிவபெருமானுடைய அனந்த கல்யாண குணங்களைத் தேன் பொருந்திய தாமரைப் பூவில் தங்கிய திருமகள் போன்ற பூம்பாவைப் பாட்டாகச் செந் தமிழால் புகழ்ந்து பாடிய பதிகத்தை, நாடோறும் ஓத வல்லவர் வான லோகத்திலுள்ள தேவர்களோடும் வாழ்வர்.

திருச்சிற்றம்பலம்

---

* "உரிஞ்சன கூறைக ளுடம்பின ராகி
யுழிதரு சமணரும் சாக்கியப் பேய்களும்."
—(திருஇலம்பையங் கோட்டூர் தேவாரம்)

†பெருஞ்சாந்தி—இது பவித்ரோத்ஸவம் எனப்படும் சம்வத்ஸர ப்ராயஸ் சித்தம் ஆகும்.
—(சித்தாந்தம் மலர் 27, இதழ் 8)

உ
சிவமயம்

திருமயிலைத் திருப்புகழ்

களபமணி யார முற்ற வனசமுலை மீது கொற்ற
கலகமத வேள்தொ டுத்த கணையாலுங்
கனிமொழிமி னார்கள் முற்று மிசைவசைகள் பேச வுற்ற
கனலெனவு லாவு வட்ட மதியாலும்

வளமையணி நீடு புஷ்ப சயன அணை மீது ருக்கி
வனிதைமடல் நாடி நித்த நலியாதே
வரியளியு லாவு துற்ற இருபுயம ளாவி வெற்றி
மலரணையில் நீய ணைக்க வரவேணும்

துளபமணி மார்ப சக்ர தரனரிமு ராரி சர்ப்ப
துயிலதர னுத ரித்த மருகோனே
சுருதிமறை வேள்வி மிக்க மயிலை நகர் மேவு முக்ர
துரகதக லாப பச்சை மயில்வீரா

அளகைவணி கோர்கு லத்தில் வனிதையுயிர் மீள ழைப்ப
அருள்பரவு பாடல் சொற்ற குமரேசா
அருவரையை நீறெ ழுப்பி நிருதர் தமை வேர றுத்து
அமரர்பதி வாழ வைத்த பெருமாளே.

—அருணகிரிநாதர்

பெரியபுராணம்

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லாரடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னாலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார்.

—சேக்கிழார்

திருமயிலைப் பிரபந்தங்கள்

★

1. திருமயிலை (சிங்காரவேலர்) பிள்ளைத் தமிழ்
—தாண்டவராயப் புலவர்.

2. திருமயிலை (சிங்காரவேலர்) கோவை
—அம்பல வாணக்கவிராயர்.

3. திருமயிலை உவமை வெண்பா
—திருநெல்வேலி நடலிங்கக்கவிராயர்.

4. திருமயிலை வெண்பா–இயற்றிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை
மேற்குறித்த நான்கு நூல்களும் "திருமயிலைப் பிரபந்தங்கள்" என்ற தொகுப்பாக, (The Curator Govt. Oriental Manuscripts Library) யால் வெளியிடப்பட்டுள்ளது.

5. திருமயிலை உலா—(ஆசிரியர் பெயர் தெரியவில்லை.)

6. திருமயிலைக் கலம்பகம் ,,

7. கபாலீசர் பஞ்சரத்தினம் ,,

8. கற்பகவல்லி மாலை ,,

9. சிங்காரவேலர் வெண்பா—தாண்டவராய புலவர்.

10. திருமயிலை யமக வந்தாதி— ,,

11. மயிலைச் சிலேடை வெண்பா—மாயூரம் இருஷ்ணய்யர் என வழங்கும் இருஷ்ண நந்த யோகி.

12. திருமயிலைத் தல புராணம்—மூலம்-திருவண்ணாமலை ஆதினம் அமிர்தலிங்கத் தம்பிரான் - உரையாசிரியர் - மகா வித்வான். காஞ்சிபுரம் சபாபதி முதலியார்.

13. பூம்பாவையார் விலாசம்—நாடகம்-கருவம்பாக்கம். ஆறுமுக முதலியார்.

14. திருமயிலைத் (சிங்காரவேலர்) திருப்புகழ்—அருணகிரிநாதர்.

தொண்டைமண்டலம் பூவிருந்தவல்வி

உயர் துளுவ வேளாளர் மரபினர் ஆட்சிக்குட்பட்ட

திருமயிலை

ஸ்ரீ கற்பகவல்லி சமேத ஸ்ரீ கபாலீசுவரர் கோயில்

அறப்பொறுப்பாளர்கள்

—:o:—

பெயர்	காலம்
திரு. மயிலைநாட்டு. வள்ளியப்பா முதலியர்ர் ...	1800—1805
,, குத்தம்பாக்கம். மாசிலாமணி முதலியர்ர் ...	1800—1813
,, மயிலைநாட்டு. சுப்பராய முதலியார் ...	1805—1813
,, ,, ,, ...	1825—1826
,, மயிலைநாட்டு. வயர்ச்சி. அய்யா முதலியார் ...	1813—1826
,, முத்துசாமி முதலியார் ...	1813—1825
,, மயிலைநாட்டு. வயர்ச்சி. செங்கல்வராய முதலியார்	1826—1828
,, ,, ,, ...	1866—1878
,, கோவூர். விநாயக. ஏகாம்பர முதலியார் ...	1826—1866
,, மயிலைநாட்டு. சிங்காரவேலு முதலியார் ...	1866—1878
,, மயிலைநாட்டு. நாகமணி முதலியார் ...	1878—1895
,, சோராஞ்சேரி. தணிகாசல முதலியார் ...	1878—1882
,, அரன்வாயல். பாபுராவ் முதலியார் ...	1882—1886
,, தேனாம்பேட்டை. முருகேச முதலியார் ...	1886—1905
,, பம்மல். அய்யாசாமி முதலியார், M.A., B.L. ...	1895—1899
,, இராவ்பகதூர், பம்மல். சம்பந்த முதலியார், B.A., B.L. ...	1899—1924
,, புத்தவேடு. சுப்பராய முதலியார் ...	1905—1910
,, இராவ்பகதூர். திருமணம். அண்ணாமலை முதலியார் ...	1910—1926

திரு. அரன்வாயல். வெங்கடசுப்பு முதலியார் B.A., B.L.	1924—1935
,, ,, ,, (ரிசீவர்) ...	1935—1940
,, ,, அறப்பொறுப்பாளர்	1940—1945
,, மயிலைநாட்டு. அரிபான். அண்ணுமலை முதலியார்	1927—1934
,, பெர்ழிச்சலூர். சுந்தரமூர்த்தி முதலியார் ...	1934—1935
,, ,, ,, ...	1940—1945
,, K. சந்திரசேகர அய்யர் (ரிசீவர்) ...	1936—1939
,, அரசூர். பார்த்தசாரதி முதலியார் (ரிசீவர்) ...	1939—1940
,, சிட்டத்தூர். செந்தில்வேலு முதலியார் (ரிசீவர்)	1937—1940
,, ,, ,, அறப்பொறுப்பாளர்	1945—1946
,, பாக்கம். இராமசாமி முதலியார், B.A. ...	1945—1948
,, பூவிருந்தவல்லி. கி. ஞானசாகர முதலியர்ர் ...	1945—1948
,, ,, ,, ...	1949—1954
,, அரியநல்லூர். அய்யாசாமி முதலியார் ...	1947—1948
,, T. S. தங்கவேலு பிள்ளை, B.A., B.L. (இடைக்கால ஆட்சியாளர்) ...	—1948—
,, பம்மல். வரதராஜ முதலியார் (இடைக்கால ஆட்சியாளர்)...	—1948—
,, ,, அறப்பொறுப்பாளர்...	1949—
,, இரர்வ்சாயப், மணிவாக்கம். சிவானந்த முதலியார் ...	1949—1951
,, புட்டுலூர். ஆறுமுக முதலியார், B.A. ...	1951—
,, குத்தம்பாக்கம். அய்யா. சுப்பிரமணிய முதலியார்	1954—
,, பரணிபுத்தூர். சை. அண்ணுமலை முதலியார்	1955—

—(o)—